## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.540/2021 |
| Prosecution Witness | : | அ.சா.1 |
| Name | : | பி.சீனிவாசன் |
| Father's/Husband Name: | : | பொன்னம்பலம் |
| Address : | : | 5/1, குமணன் தெரு, சேந்தன்குடி, மயிலாடுதுறை. |
| Age | : | 58/2023 |

தேதி: 09/10/2023

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி D.இந்துமதி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது (1 **மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை /குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

1. நான் தற்போது மயிலாடுதுறை நகராட்சியில் உணவு பாதுகாப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் நகராட்சியில் உணவு பாதுகாப்பாளராக பணியாற்றினேன்.கடந்த 01/02/2019 முதல் 27/02/2019 வரை நான் மருத்துவ விடுப்பில் இருந்தேன். அப்போது உணவு பாதுகாப்பு ஆணையர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின் படி திரு. கௌதமனன் என்பவர் உணவு பாதுகாப்பு அலுவலராக பொறுப்பு வகித்தார். அந்த காலகட்டத்தில் 14/02/2019 அன்று நியூ சங்கர் ஸ்டோர், பெரம்பலூர் என்ற கடையில் ஆய்விற்காக சென்று புகையிலை பொருட்களை கைப்பற்றி மாதிரிகளை சேலம், பகுப்பாய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

2. அதன் முடிவுகள் 28/02/2019 அன்று நியமன அலுவலர் அலுவலகத்திற்கு வரப்பெற்றது. அன்றே நான் அனைத்து ஆவணங்களையும் அவரிடமிருந்து நான் வாங்கி கொண்டேன். பிறகு 01/03/2019 அன்று நியூ சங்கர் ஸ்டோர் மற்றும் வி.எஸ்.புராடக்ட் ஆன்ந்தர சனகதி இன்டஸ்டிரியல் ஏரியா, தும்கூர், கர்நாடகா ஆகிய இருவருக்கும் அந்த படிவம் பி-யை மாவட்ட நியமன அலுவலர் அனுப்பி வைத்துள்ளார். ஆனால் அதன் மீது மேல்முறையீடு ஏதும் செய்யவில்லை. 08/03/2019 அன்று 1 ம் எதிரி மீது வழக்கு தொடுக்க நியமன அலுவலர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார். 01/04/2021 அன்று எதிரி 1 மற்றும் 2 ன் மீது வழக்கு தொடுக்க ஆணையர் அவர்கள் நியமன அலுவலருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அதன் அடிப்படையில் இந்த புகார் என்னால் தொடரப்பட்டுள்ளது. கடந்த 02/03/2019 அன்று தயாரிப்பாளரின் நாமினி விவரங்கள் கேட்டு இரண்டாம் எதிரிக்கு ஓர் அறிவிப்பை கொரியர் மூலமாக அனுப்பினேன். அவ்வாறு அனுப்பியதற்கான கொரியர் ரசீது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவ்வாறு அனுப்பிய கடிதத்திற்கு எந்தவித பதிலும் வழங்காததால் மீண்டும், 23/02/2021 அன்று நினைவூட்டல் கடிதத்தை பதிவு தபால் மூலம் அனுப்பினேன். அதற்கான அஞ்சல தபால் ரசீது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார்ப்படி தீர்ப்பாக வேண்டும்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மாதிரி பொருட்கள் சேகரித்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு உணவு மாதிரி எடுத்தது தெரியாது என்றாலும்,

எனக்கு இந்த வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாமல் மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வழக்கை நான் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பெரம்பலூர் நகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலராக 05/07/2018 முதல் 27/07/2021 வரை பணிபுரிந்தேன். 14/02/2019 அன்று நான் விடுப்பில் இருந்தேன். அதனால் அன்றைய தினம் எடுக்கப்பட்ட உணவு மாதிரி பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அது சம்பந்தப்பட்ட கோப்புகள் மற்றும் ஆவணங்கள் பற்றி எனக்கு நன்றாக தெரியும். 08/03/2019 அன்று முதலாம் எதிரி மீது மட்டும் வழக்கு தொடர பரிந்துரை திறந்தார் என நான் சாத்தியமறித்துள்ளேன் என்றால் சரிதான். உணவு மாதிரியே பகுப்பாய்வு அறிக்கை 28/2/2019 அன்று நியமன அலுவலரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலித்து தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 28/02/2019 அன்று பெறப்பட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை நாங்கள் தொடர்ந்து உள்ளோம் என்றால் சரி அல்ல. எந்த தேதியில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் 04/05/2021. ஓராண்டிற்குள் இந்த வழக்கு தொடரப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஏனென்றால் 01/04/2021 அன்று தான் ஆணையர் இந்த வழக்கை தொடர்வதற்கு ஆணை வழங்கியுள்ளார். அதை நாங்கள் 19/04/2021 அன்று பெற்றுள்ளோம்.

CV/NDA

நாங்கள் உணவு மாதிரி எடுக்கப்பட்டதற்கான அரசாணை 2020 ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது என எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஏனென்றால் அது வருடாவருடம் நீட்டிக்கப்படும் 2019 ஆண்டு எடுக்கப்பட்ட மாதிரிக்கு 2020 ம் ஆண்டிற்கான அரசாணையை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல. இரண்டாம் எதிரி நிறுவனத்தில் தயாரிக்கப்படும் பொருட்கள் தடை செய்யப்பட்ட பொருட்கள் என காண்பிக்கும் அரசாணை உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. நான் எதிரி நிறுவனத்தை நேரடியாக சென்று ஆய்வு ஏதும் நடத்தவில்லை. 2 ம் எதிரி தான் இந்த நிறுவனத்தின் அன்றாட வரவு செலவுகளையும் நிர்வாகத்தையும் கவனித்து வருபவர் என தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 2 ம் எதிரி நிறுவனத்தில் தயார் செய்யப்படும் இந்த தயாரிப்புகள் கர்நாடகா மாநில அரசால் தடை செய்யப்படவில்லை என்றால் தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. எங்களது துறைக்கு கீழ் புகையிலை ஆராய்ச்சி நிறுவனம், வேடசந்தூரில் செயல்பட்டு வருகிறது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எதிரி நிறுவன பொருட்களை வாங்கியற்கு ரசீதுகள் கொடுக்கப்பட்டதா என்றால் நான் பொருட்களை வாங்கவும் இல்லை. அதனால் எனக்கு அது பற்றி தெரியாது. 2 ம் எதிரி நிறுவனத்தால் 1 ம் எதிரி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பில்ஸ் மற்றும் வாரண்டிகளை பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. இடைத்தரகர் மூலமாக இந்த பொருட்களை 1 ம் எதிரி வாங்கியதாக எனது புகார் மனுவில் கூறியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு

உணவு மாதிரி எடுத்தது தெரியாது என்றாலும், எனக்கு இந்த வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாமல் மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வழக்கை நான் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.540/2021 |
| Prosecution Witness | : | அ.சா.2 |
| Name | : | கௌதமன் |
| Father's/Husband Name: | : | சிதம்பரம் |
| Address : | : | 28/64, டி.வி.கபிலன் நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர், |
| Age | : | 59/2023 |

தேதி: 09/10/2023

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி D.இந்துமதி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **( எதிரி ஆஜர் இல்லை /குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டாரம், தொண்டராம்பட்டு, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார சுகாதார மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் ஆலத்தூரில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றிய போது பெரம்பலூருக்கு நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 09/02/2019 முதல் கூடுதல் பொறுப்பில் பணியாற்றினேன். அவ்வாறு நான் நியமிக்கப்பட்ட ஆணையின் நகல் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14/02/2019 அன்று மாலை 4.00 மணியளவில் பெரம்பலூர் என்.எஸ்.பி சாலையில் உள்ள நியூ சங்கர் ஸ்டோர் என்ற கடைக்கு ஆய்விற்காக சென்றேன். அப்போது நான் உணவு பாதுகாப்பு அலுவலர் என என்னை அறிமுகப்படுத்தி கொண்டு கடையின் உரிமையாளர் ஆப்சிங் த/பெ.மோத்சிங் என்பவர் கடையின்

உரியையாளர் என தெரிவித்து கடையின் உரிமத்தை காண்பித்தார். அந்த உரிமத்தின் நகலை நான் பெற்றுகொண்டேன். அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரியின் முழு கடையையும் ஆய்வு செய்த போது 6 TOBACCO என்ற பொருள் இருப்பதை கண்டறிந்து அது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 மற்றும் அதன் விதிகளுக்கு முரணமாக இருப்பதாக சந்தேகப்பட்டு நான் அதை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் படிவம் எண்.2 **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு கைப்பற்றுவதற்கான ஆணையின் படிவம் எண்.3 யை தயார் செய்து கடையின் உரிமையாளரிடம் கையொப்பம் பெற்றேன். அந்த படிவம் எண்.3 **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடையின் உரிமையாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றேன். அது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கைப்பற்றிய மாதிரிகளை பகுப்பாய்விற்கு அனுப்புவதற்கான எனது விருப்பத்தை கடைக்காரரிடம் தெரிவித்தேன். அதற்கு அவரும் ஒப்புதல் வழங்கினார். அந்த படிவம் 5A **அ.சா.ஆ.8** ஆக குறியிடு செய்யப்படுகிறது. அதில் எதிரியின் கையொப்பத்தையும் சாட்சிகளின் கையொப்பத்தையும் பெற்று அதில் ஒரு பிரதியை எதிரிக்கு வழங்கினேன். பின் பறிமுதல் செய்த 6 TOBACCO பொருட்களிலிருந்து 1.2 கிலோ எடுத்து 300 கிராம் வீதம் 4 பாகங்களாக பிரித்து சட்டம் சார்ந்த உணவு மாதிரி எடுத்தேன். பின்னர் எடுக்கப்பட்ட 30 பாக்கெட்டுகள் அடங்கிய பொட்டலங்கள் ஒவ்வொன்றும், 300 கிராம் வீதம் 4

Copy

பொட்டலமாக பிரித்து 4 முறுக்கு நூல்கள் கொண்டு கட்டினேன். அந்த உணவு மாதிரியின் 4 பாகங்களும் தனித்தனி பார்சல் கவர் கொண்டு இறுக சுற்றி இரு முனைகளிலும் சீராக மடித்து பசையினால் தடவி ஒட்டி வைத்தேன். பின்பு உணவு மாதிரி பொருட்கள் அடங்கிய லேப்பில்கள் தயார் செய்து 1ம் எதிரியின் கையொப்பம் பெற்று அந்த பொட்டலங்களில் ஒட்டினேன். உணவு மாதிரியின் இன்னொரு பார்சலையும் அவ்வாறே ஒட்டி நியமன அலுவலரின் கோடு எண் 015 மற்றும் வரிசை எண். 208/2018-2019 ஆகியவற்றை அதில் கையொப்பம் பெற்று அந்த பொட்டலங்கள் மீது கீழிருந்து மேலாக எந்தவித இடைவெளியும் இல்லாமல் இரு நுனிகளையும் சேர்த்து ஒட்டினேன். அதில் 1ம் எதிரியின் கையொப்பத்தை கவரில் பாதியும் அந்த ஸ்லிப்பில் பாதியுமாக பெற்றேன். பின்னர் கெட்டியான நூலினால் கட்டி 5க்கும் மேற்பட்ட இடங்களில் எங்களது முத்திரையினை வைத்தோம். எதிரியின் கையொப்பத்தை பெற்ற உணவு மாதரி பாகங்களை 1,2,3,4 என குறியீடு செய்தோம். மேலும், 1ம் எதிரிக்கு இந்த சட்டப்படி கிடைக்க கூடிய உரிமைகளை அதாவது NABL நிறுவனத்திற்கு அனுப்ப கூடிய உரிமையினை எடுத்து கூறி அதை எழுத்து மூலமாக 1ம் எதிரிக்கு சார்வு செய்தேன். அந்த அறிவிப்பு **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி 4 பாகத்தை அனுப்பி விருப்பமில்லை என தெரிவித்தார். அது **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 6-யை 6 ஆவணமாக தயார் செய்து 1-வது உணவு மாதிரியுடன் முத்திரை மற்றும் படிவம் 6 யை இணைத்து சேலம் உணவு பகுப்பாய்விற்கு அன்றைய தினமே எஸ்டி கொரியர் மூலம் அனுப்பி

வைத்தேன். அந்த படிவம் எண்.6 மற்றும் அதனுடன் இணைந்த மாதிரி முத்திரை **அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தனி கவரில் மாதிரி முத்திரை படிவம் மற்றும் படிவம் 6-யை இணைத்து எஸ்டி கொரியர் வாயிலாக அனுப்பினேன். அந்த எஸ்டி கொரியர் மூலமாக அனுப்பப்பட்ட கொரியர் ரசீதுகள் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 3 உணவு மாதிரிகளையும் படிவம் 6 மற்றும் மாதிரி முத்திரைகள் அடங்கிய அனைத்தையும், நியமன அலுவலர்களிடம் 14/02/2019 அன்று கடிதம் மூலம் வாயிலாக சமர்பித்தேன். அந்த கடிதம் **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதை அவர் பெற்றுகொண்டதற்கான ஒப்புகையை இந்த புகாருடன் தாக்கல் செய்துள்ளோம். அது **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் இந்த நடைமுறைகளை பின்பற்றிய போது சாட்சியாக ரவி த/பெ.பிச்சை மற்றும் சேத்தன் சிங் த/பெ.சதன் சிங் இருவரும் இருந்து கையொப்பம் இட்டனர். பின்பு 28/02/2019 அன்று அ.சா.1 சீனிவாசன் உணவு பாதுகாப்பு அலுவராக மருத்துவ விடுப்பில் இருந்து திரும்பினார். அதனால் என்னிடமிருந்த வழக்கு ஆவணங்களை அவரிடம் ஒப்படைத்தேன். நான் பணிமாற்றம் செய்யப்பட்டதற்கான ஆணையின் உண்மை நகலை இத்துடன் தாக்கல் செய்கிறேன். அது **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்களை உணவு பாதுகாப்பு அலுவலராக நியமிக்கப்பட்ட ஆணையினை இத்துடன் தாக்கல் செய்கிறேன். அது **அ.சா.ஆ.17** ஆக குறியீட செய்யப்படுகிறது. புகார்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

## 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

தான் முதல் விசாரணையில் கூறிய பொருட்களைதான் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினேன் என்றால் சரிதான். அதை தவிர வேறு எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் 14/02/2019 அன்று மாலை 4.00 மணியளவில் முதலாம் எதிரியின் கடைக்கு சென்றேன். அப்போது, நான் மட்டும்தான் சென்றேன். அங்கு சுமார் 2 மணி நேரம் ஆய்வு செய்து மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டேன். அந்த கடை கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. அந்த கடைக்கு அருகில் என்னென்ன கடைகள் உள்ளது என தற்போது நினைவில்லை. அந்த கடைக்கு அருகில் உள்ள நபர்களை இந்தத வழக்கில் நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிரிக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். 1 ம் எதிரி எழுதியதாக கூறப்படும் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்றால் அவரது கடையில் வேலை பார்த்த நபர் எழுதினார். அது எதிரிக்கு படித்து காட்டப்பட்டது என எந்த வாசகமும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கடைசி மூன்று வரிகள் வேறு பேனாவாலும், வேறு நபராலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் அதை எழுதினார்கள் என மேற்குறிப்பு கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் வெற்று தாளில் கையொப்பம் பெற்று பிறகு நானே பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. அதனால்தான் சேத்தன்சிங் முதலாம் சாட்சியாகவும், ரவி இரண்டாம் சாட்சியாகவும், மற்ற அனைத்து ஆவணங்களிலும் ரவி முதலாவது சாட்சியாகவும் சேதம் சிங் இரண்டாம்

சாட்சியாகவும் கையொப்பமிட்டுள்ளனர் என்றால் சரியல்ல. முதலாம் எதிரியின் கடையில் பணத்தை கொடுத்து அந்த பொருளை பெற்றதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஏனென்றால் நான் அந்த பொருளை கைப்பற்றினேன் கைப்பற்றும்போது பொருளை வாங்க வேண்டிய அவசியம் இல்லை. தேசிய பகுப்பாய்வு நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு விருப்பமில்லை என தட்டச்சு செய்து கொண்டு வரப்பெற்ற ஆவணத்தில் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அவரது நிறுவனத்திற்காக உரிய உரிமம் அரசிடம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எங்களது உயர் அதிகாரியின் உத்தரவுப்படி மாதம் குறிப்பிட்ட வழக்கு போட வேண்டும் என்பதற்காக வேறு ஒரு வழக்கில் கைப்பற்றப்பட்டு எங்களது இருப்பில் உள்ள பொருட்களை முதலாம் எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளிடம் நான் எப்போது கையொப்பம் பெற்றேன் என குறிப்பிட்டு கூறமுடியாது. ஆனால் 4.00-8.00 மணி வரை பெற்றேன். உண்மையிலேயே நான் கையொப்பம் பெற்றிருந்தால் நேரத்தை என்னால் குறிப்பிட்டு கூறயிருக்க முடியும் என்றாலும் நான் கையொப்பம் பெறவில்லை என்பதால் தான் என்னால் கூறமுடியவில்லை என்றால் சரிதான். நாங்கள் கடைக்கு பின்னால் உள்ள குடோனுக்கும் சென்றேன். அங்கு வைத்து தான் கைப்பற்றினேன். உண்மையிலேயே நான் கடைக்கு செல்லவில்லை என்றாலும், கடையின் திசையை கூட என்னால் சரிவர கூறமுடியவில்லை

என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடம் நான் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், நான் அவரிடம் எந்த கையொப்பமும் பெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கைப்பற்றப்பட்ட பொருளான 6 TOBACCO FSSAI முத்திரை இருந்ததா என்றால் இல்லை. அது COTPA Act க்கு உட்பட்டு வரும் என அந்த பொருளில் அச்சிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் கைபற்றதாக கூறப்படும் ஆறு மாதிரி படிவங்களின் மாதிரிகளில் ஒன்றையாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை தேவைப்பட்டால் என்னால் தாக்கல் செய்ய முடியும். நான் உணவு மாதிரியே எடுத்த பிறகு தான் பொருளை கைப்பற்றி இருக்க வேண்டும் என்றாலும் ஆனால் இந்த வழக்கில் கைப்பற்றிய பிறகு உணவு மாதிரியே எடுத்தேன் என கூறுவது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. புகையிலையை உணவுப் பொருள் என மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் வகைப்படுத்தி உள்ளதா என்றால் ஆமாம். உணவுப்பொருளில் கலப்படமோ அல்லது தடை செய்யப்பட்ட பொருளாகவோ இருக்கும்போது நாங்கள் சந்தேகத்தின் அடிப்படையில் பொருளை கைப்பற்றுவது வழக்கம். கண்ணால் பார்த்தவுடன் ஒரு பொருளை தடை செய்யப்பட்ட பொருள் என என்னால் கணிக்க முடியாது என்றால் சரிதான். அந்த உணவு மாதிரியை ஆய்வுக்காக

VMJudg

எடுத்த போது அதன் சுவை மனம் நிறம் எதையாவது சோதித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. உணவு மாதிரியை மேலே அச்சிடப்பட்ட முகவரியை வைத்து மட்டுமே நாங்கள் அவர்களை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். தான் முதல் விசாரணையில் கூறிய பொருட்களைதான் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினேன் என்றால் சரிதான். அதை தவிர வேறு எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் 14/02/2019 அன்று மாலை 4.00 மணியளவில் முதலாம் எதிரியின் கடைக்கு சென்றேன். அப்போது, நான் மட்டும்தான் சென்றேன். அங்கு சுமார் 2 மணி நேரம் ஆய்வு செய்து மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டேன். அந்த கடை கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. அந்த கடைக்கு அருகில் என்னென்ன கடைகள் உள்ளது என தற்போது நினைவில்லை. அந்த கடைக்கு அருகில் உள்ள நபர்களை இந்தத வழக்கில் நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிரிக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். 1 ம் எதிரி எழுதியதாக கூறப்படும் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்றால் அவரது கடையில் வேலை பார்த்த நபர் எழுதினார். அது எதிரிக்கு படித்து காட்டப்பட்டது என எந்த வாசகமும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கடைசி மூன்று வரிகள் வேறு பேனாவாலும், வேறு நபராலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் அதை எழுதினார்கள் என மேற்குறிப்பு கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் வெற்று தாளில் கையொப்பம் பெற்று பிறகு நானே பூர்த்தி செய்தேன் என்றால்

சரியல்ல. அதனால்தான் சேத்தன்சிங் முதலாம் சாட்சியாகவும், ரவி இரண்டாம் சாட்சியாகவும், மற்ற அனைத்து ஆவணங்களிலும் ரவி முதலாவது சாட்சியாகவும் சேதம் சிங் இரண்டாம் சாட்சியாகவும் கையொப்பமிட்டுள்ளனர் என்றால் சரியல்ல. முதலாம் எதிரியின் கடையில் பணத்தை கொடுத்து அந்த பொருளை பெற்றதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஏனென்றால் நான் அந்த பொருளை கைப்பற்றினேன் கைப்பற்றும்போது பொருளை வாங்க வேண்டிய அவசியம் இல்லை. தேசிய பகுப்பாய்வு நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு விருப்பமில்லை என தட்டச்சு செய்து கொண்டு வரப்பெற்ற ஆவணத்தில் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அவரது நிறுவனத்திற்காக உரிய உரிமம் அரசிடம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எங்களது உயர் அதிகாரியின் உத்தரவுப்படி மாதம் குறிப்பிட்ட வழக்கு போட வேண்டும் என்பதற்காக வேறு ஒரு வழக்கில் கைப்பற்றப்பட்டு எங்களது இருப்பில் உள்ள பொருட்களை முதலாம் எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளிடம் நான் எப்போது கையொப்பம் பெற்றேன் என குறிப்பிட்டு கூறமுடியாது. ஆனால் 4.00-8.00 மணி வரை பெற்றேன். உண்மையிலேயே நான் கையொப்பம் பெற்றிருந்தால் நேரத்தை என்னால் குறிப்பிட்டு கூறயிருக்க முடியும் என்றாலும் நான் கையொப்பம் பெறவில்லை என்பதால் தான் என்னால் கூறமுடியவில்லை என்றால் சரிதான். நாங்கள் கடைக்கு பின்னால் உள்ள

குடோனுக்கும் சென்றேன். அங்கு வைத்து தான் கைப்பற்றினேன். உண்மையிலேயே நான் கடைக்கு செல்லவில்லை என்றாலும், கடையின் திசையை கூட என்னால் சரிவர கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிரியிடம் நான் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், நான் அவரிடம் எந்த கையொப்பமும் பெறவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிரி 2 ம் எதிரியிடமிருந்து பொருட்களை வாங்கியதற்கான பில்ஸ் மற்றும் வாரண்டிகளை என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

Live Law